**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்**

**OS.No: 5/2017** **நாள் 22.06.2026**

**பிவாசா.2, திரு.அருள்ராஜ் என்ற அருள்ஸ்ரீராஜவேல்**

**பி.வா.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 1ம்எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

வாதி முத்தம்மாள் என் அப்பாவுடன் பிறந்த தங்க ஆவார். எனக்கு அத்தை முறை. 1ம் எதிர்வாதி என் அப்பாவின் அண்ணன். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லிய விபரங்கள் எனக்கு யார் சொன்னது என்று கேட்டால் என் அப்பா என்னிடம் சொல்லியிருந்தார். வழக்கை தாக்கல் செய்த சமயத்தில் என் அப்பா உயிருடன் இல்லை. என் வயது தற்போது 36. நான் பி.டெக் சிவில் படிப்பை படித்துள்ளேன். பிராது 1ம் அயிட்ட சொத்தின் சர்வே எண்.143. அதன் விஸ்தீரணம் 40 X 55 அடி ஆகும். பிவாசாஆ.1 உயில் ஆவணத்தில் கண்ட சொத்தின் அசல் ஆவணமானது என் தாத்தா கிரையம் வாங்கிய கிரைய பத்திரம் ஆகும்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டி இருதரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 22nd day of June 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.